www.padippakam.com



# வங்கக் கடலோரம் வாசம் செய்யும் வல்லிபுர ஆழ்வாரும் சிங்கை நகரும்

13

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்

குடாநாட்டு அரசின் தலைநகர்களில் கதிரமலைக்கு அடுத்தபடியாக அதிகம் அறியப்படுவது சிங்கைநகரமாகும். ஆனாலும் கதிரமலைக்கு அடுத்தபடியாக சிங்கைநகர் தலைநகராவதற்கு முன் "செங்கட நகரி" ஓர் இடம் தலைநகராக இருந்த தென்மயில்வாகனப் புலவரால் 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### செங்கடநகரி

இந்தக் குறிப்பு தவறானதென்று பின்னாளில் (1933) யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிய முதலியார் இராஜநாயகம் கூறு



வல்லிபுரம் பகுதி

கிறார் 'சிங்கைநகர்' பற்றிய குறிப்புக்கள் வைபவ மாலைக்கு முந்திய கைலாயமாலை, வைபவப் பாடல், பரராசசேகரன், உலரி முதலான ஏட்டுச் சான்றுகளிலும், தென்னிலங்கையில் கேட்டகம முதலான இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுச் சான்றுகளிலும் காணப்படுகிறது. ஆனால் "செங்கட நகரி" என்னும் பெயர் வைபவ மாலையை தவிர வேறெதிலும் காணப்படவில்லை.

சிங்கைநகர் என்னும் பெயரை மயில்வாகனப் புலவரோ அவருக்குப்பின் ஏடெழுதிய எவரோ "செங்கட நகர்" என்று வைபவ மாலையில் மாற்றி எழுதிவிட்டனர். உக்கிரசேனன் காலத்தில் "செங்கடநகர்" என்பது கனவிலும் அறியாத ஒன்று என்பது முதலியார் இராஜநாயகத்தின் வாதமாகும்.

### சிங்கை நகர் எது?

சிங்கை நகர் என்பது வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறையிலிருந்து 3 மைல் தொலைவில் பிரசித்திபெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்திருக்கும் இன்றைய வல்லிபுரப் பகுதியே என்று முதலியார் இராஜநாயகம் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர் முதலான பலர் குறிப்பிட்டுள்ளனர். இல்லை அது இன்றைய நல்லூருக்கு அண்மையில் இருந்த ஒரு பகுதி என்றும், இன்றைய பூநகரி பகுதியாக அது இருந்திருக்கலாம் என்றும் கூட சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

வல்லிபுரம் பகுதிதான் சிங்கைநகர் என்பதற்கான உறுதியான சான்றாதாரங்கள் எதுவும் இல்லாத போதிலும் ஊகங்களின் அடிப்படையில் அதுவே மற்றைய கருத்துக்களை விட மேலோங்கி இருக்கிறது. 1930-ம் ஆண்டளவில் இன்றைய வல்லிபுர ஆழ்வார் கோவில் வீதியை புனரமைக்க முயன்றபோது கிடைத்த பொற் சாசனம் ஒன்று அங்கே பௌத்த பள்ளி ஒன்று இருந்ததற்கான செய்தியைச் சொன்னது. பாளிமொழியில் எழுதப்பட்ட அந்தச் செய்தியை அடிப்படையாக வைத்துக் கொண்டு பரணவிதான முதலான சிங்கள மகாவம்ச வரலாற்றுப் பரம்பரையினர் அதை சிங்கள பிரதேசமாக காட்ட முனைந்தனர். ஆயினும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதலான பல்வேறு தமிழ் வராற்று ஆசிரியர்களும் ஆர்வலர்களும் அதற்கு எதிரான தொடர்ச்சியான ஆய்வுப் போரை நடத்தினார்கள்.

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினரால் 1970 களில் நடத்தப்பட்ட தொல்லியல் மேலாய்வின்போது கிடைக்கப் பெற்ற முதுமக்கள் தாழிகள் மற்றும் வல்லிபுரக் கடற் கரையோரம் காணப்படும் பெருவீதிகளில் இருந்ததற்கான தடையங்கள் கோவிலுக்கும் வங்கக் கடற்கரைக்கும் இடைப்பட்ட மிகப் பரந்த மணற்பரப்பில் எண்ணுக்கணக்கற்று சிதறிக்கிடக்கும் பூர்வீக கல்லோடுகள் வாடைக்காற்றும் சோளக்காற்றும் பலமாக அடிக்கின்ற காலங்களில் மணற்கும்பிகள் அரிக்கப்படும் போது வெளிப்படும் கட்டிட இடிபாட்டுத் தடையங்கள் போர்க் கருவிகளின் சிதைவுகள் என்பன அது ஒரு தலைநகராகவோ பெருநகராகவோ இருந்ததற்கான சான்றையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அதாவது பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்திலிருந்தே அங்கு மக்கள் வாழ்ந்து வந்ததற்கான சான்றையும் பகர்கின்றன.

இவற்றைவிட வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தல வரலாறு அந்தப் பகுதியிலே வாழ்ந்து வருகின்ற மக்களிடையே வழங்கிவருகின்ற செவிவழிக் கதைகள் என்பனவும் "வல்லிபுரம் ஒரு பழைய இராஜதானி" என்பதற்கு சான்றாக அமைகின்றன. வல்லி என்ற அரசியே அங்குள்ள ஆழ்வார் (விஷ்ணு) ஆலயத்தை நிர்மானித்ததாக அவ்வாலய தலபுராணம் சொல்கிறது. இந்த வல்லி உக்கிர சிங்கனின் மனைவியான மாருதப் பிரவல்லியாக இருக்கலாம் என பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அபிப்பிராயப்படுகிறார். வல்லியின் அந்தப்புரம் இருந்த பகுதியே இன்று வல்லிபுரம் என்று ஆகிவிட்டதென்றும் மக்கள் குடியிருப்பே இலலாமல் வல்லிபுரம் ஆழ்வார் கோயிலுக்கு அப்பால் வங்கக்கடற்கரை வரை 5 மைல் சுற்றாடலுக்கு பரந்து விரிந்து கிடக்கின்ற மணற்பரப்பே சிங்கைநகர் என்றும் அங்கு வசிக்கும் மக்களிடையே வழங்கிவரும் செவ்விவழிக் கதைகள் தெரிவிக்கின்றன.

வைபவமாலை ஆசிரியர் மயில்வாகனப் புலவரும் யாழ்பாணச் சரித்திரம் எழுதிய முதலியார் இராஜநாயகமும் சிங்கைநகரை உருவாக்கிய உக்கிரசேனனை விஜயனின் வம்சாவழியினனாகவும் கலிங்க மரபினனாகவும் காட்டியதை அடியொற்றி பேராசியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் தமிழர் சமய வரலாறு என்ற தனது நூலில் சிங்கைநகர் என்ற பெயரை வைஷ்ணவ மதப்பாரம் பரியத்துடன் ஒப்பிடுகின்றார்.



சிங்கபுரம்

வல்லிபுரம் பகுதி

"கலிங்கநாட்டின் பழைய தலைநகரம் ஒன்றின் பெயர் சிங்கபுரமகும். அதைவிட கலிங்க நாட்டில் சிங்காசலம் அல்லது சிங்கவேள் குன்றம் என்ற பிரசித்தி பெற்ற வைஷ்ணவத்தலம் ஒன்று உண்டு. இது திருமால் நரசிம்ம அவதாரம் மேற்கொண்ட தலமாக வைஷ்ணவர்களால் போற்றப்படுகிறது. தமிழ் நாட்டில் பல்லவர் காலத்தில் நரசிம்மாவதாரம் பெரிதாகப் போற்றப்பட்டது. காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோவிலிலே கூட சிங்கப் பெருமாளே ஆழ்வார்கள் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. தொண்டை மண்டலத்திலுள்ள சோளங்கிபுரம் என்ற வைஷ்ணவத் தலத்தின் உண்மையான பெயர் சோழ சிங்கபுரமாகும் சீர்காழியிலிருந்த திருவல்லித்தலத்தில் நரசிம்மன் சந்நிதியே பிரசித்தி பெற்றதும் பழமையானதுமாகும். எனவேதான் அதற்கு சமகாலத்தில் குடாநாட்டில் ஆட்சி செய்த உக்கிரசிங்கன் வல்லிபுரத்திலே நரசிங்க மூர்த்திக்கு (விஷ்ணுவை) ஆலயம் எழுப்பி அந்த ஆலய மூர்த்தியின் பெயராலேயே புதிய நகரத்திற்கு சிங்கைநகர் என்று பெயர் வைத்தாக பேராசிரியர் வேலுப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

உண்மையில் உக்கிரசேனனை கலிங்க பரம்பரையில் வந்தவன் என்றோ அதனால் அவர் வைஷ்ணவமரபை கடைப்பிடித்தான் என்று பார்ப்பதைவிட மகாயான பௌத்த மதத்தை வைஷ்ணவம் உள்வாங்கிக் கொண்டு இல்லாதொழித்த நிகழ்வுடன் பொருத்திப் பார்ப்பதே பொருத்தமாகும்.

ஏறக்குறைய உக்கிரசிங்கனின் காலத்திற்கு முன்பே கி.பி 6-ம் நூற்றாண்டில் புத்தபிரான் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு வழிபாட்டுக்குரிய கடவுளாக்கப்பட்டதை பாகவத புராணமும், மச்ச புராணமும் எடுத்துச் சொல்கிறது. அதைவிட கி.பி 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் காலக் கல்வெட்டு ஒன்றின் மூலமும் பௌத்தம் வைஷ்னவத்தில் சங்கமமாகிப் போன வரலாற்றை அறியமுடிகிறது.

**வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தல வரலாறு அந்தப் பகுதியிலே வாழ்ந்து வருகின்ற மக்களிடையே வழங்கிவருகின்ற செவிவழிக் கதைகள் என்பனவும் "வல்லிபுரம் ஒரு பழைய இராஜதானி" என்பதற்கு சான்றாக அமைகின்றன. வல்லி என்ற அரசியே அங்குள்ள ஆழ்வார் (விஷ்ணு) ஆலயத்தை நிர்மானித்ததாக அவ்வாலய தலபுராணம் சொல்கிறது. இந்த வல்லி உக்கிர சிங்கனின் மனைவியான மாருதப் பிரவல்லியாக இருக்கலாம் என பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அபிப்பிராயப்படுகிறார்.**

எனவே குடாநாட்டிலும் மகாயான பௌத்தத்தை கடைப்பிடித்து பௌத்த தலைநகரான கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட உக்கிரசேனனும் மாருதப் பிரவல்லியின் திருமணத்துடன் ஏற்பட்ட தமிழகத் தொடர்பால் வைஷ்ணவனாக மாறியிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் அவனுக்கும் கதிரமலையில் நிலைகொண்டிருந்த பௌத்தர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையிலேயே அவன் தலைநகரை மாற்றியும் இருக்க வேண்டும். அவ்வாறு மாற்றி தான் உருவாக்கிய புதிய நகரத்தில் விஷ்ணுவின் ஆலயத்தை பிரதிஷ்டை செய்து அதற்கு வைஷ்ணவ அடிப்படையில் சிங்கை நகர் என்றும் பெயர் வைத்திருக்க வேண்டும்.

அடுத்து உக்கிரசேனனுக்குப் பின்னால் வந்த யாழ்ப்பாண அரசர்கள் தங்கள் பட்டப் பெயர்களை சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று குறிப்பிட்டது ஏன் என்பதையும் ஆய்வுக்குள்ளாக்க வேண்டும்.

தமிழர்களும் திராவிடர்களுமான இவர்கள் ஏன் ஆரியச் சக்கரவர்த்திகள் என்று பட்டத்தை சூடிக் கொண்டார்கள் என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும்.


1. யாழ்ப்பாண வைபவமாலை -- முதலியார் குல சாபாராள்
2. யாழ்ப்பாணச் சரித்திரம் - முதலியார் இராசநாயகம்
3. இலங்கைவாழ் தமிழர் வரலாறு - பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை
4. தமிழர் சமய வரலாறு - கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை
5. இலங்கை இனப் பிரச்சினையின் அடிப்படைகள் - மு.திருநாவுக்கரசு.


- நக்கீரன்